පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 10 |

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023**

**இஸ்லாம்**

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................................
..............................................................................................

நேரம் : **3** மணித்தியாலம்

## விடைகள்

### பகுதி - I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 2 | 21) | 2 | 31) | 4 |
| 02) | 2 | 12) | 3 | 22) | 2 | 32) | 4 |
| 03) | 1 | 13) | 2 | 23) | 2 | 33) | 3 |
| 04) | 1 | 14) | 4 | 24) | 1 | 34) | 3 |
| 05) | 2 | 15) | 3 | 25) | 3 | 35) | 3 |
| 06) | 1 | 16) | 1 | 26) | 3 | 36) | 1 |
| 07) | 1 | 17) | 1 | 27) | 3 | 37) | 1 |
| 08) | 4 | 18) | 2 | 28) | 2 | 38) | 4 |
| 09) | 3 | 19) | 2 | 29) | 1 | 39) | 2 |
| 10) | 1 | 20) | 1 | 30) | 1 | 40) | 4 |

### பகுதி -II

**(01)**

i. வஹி மத்லூஉ - ஓதிக்காண்பிக்கப்பட்ட வஹி (உதாரணம் : அல்குர்ஆன்)
வஹி கைரு மத்லூஉ - ஓதிக்காண்பிக்கப்படாத வஹி (உதாரணம் : அஸ்ஸுன்னா)
*(வேறு பொருத்தமான உதாரணங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்)*

ii. விலங்குகளின் தோல் - பதனிடுவதன் மூலம் சுத்தமாகும்
மதுபானம் - தானாக வினாக்கிரியாக மாறுவதன் மூலம் சுத்தமாகும்

iii. இமாரத் எனப்படுவது பூமியை வளப்படுத்துவதாகும், கிலாபத் எனப்படுவது பூமியை இறைசட்டங்களினால் ஆட்சி செய்வதாகும்.

iv. அபுல் ஹஸன் அல்அஷ்அரி, அபூ மன்ஸூர் அல்மாத்ருதி, அபூ ஜஃபர் அத்தஹாவி, அஹ்மத் பின் ஹன்பல் ரஹிமஹுமுல்லாஹ் *(இவர்களில் எவரேனும் இருவர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)*

v. நூஹ் (அலை), இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மது (ஸல்) ஆகியோர் *(எவரேனும் இருவர்)*

vi. குலுக் ஹஸன், அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப் *(எவையேனும் இரண்டு)*

vii. ஸூரத்துல் இக்லாஸ், ஸூரத்துல் பலக், ஸூரத்துன் நாஸ் *(எவையேனும் இரண்டு)*

viii. பிற்காலத்தில் உருவான ரெசியல் ரீதியான பிளவுகள், அந்நிய சிந்தனைத் தாக்கங்கள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகித்தமை *(போன்ற எவையேனும் இரண்டு)*

ix. நீரைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டால், போதுமான நீர் இல்லாத போது

x. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல், படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்

**(02)**

i. இறைவனுடன் உரையாடும் சந்தர்ப்பமாக அமைதல். இறை சிந்தனையும், உள அமைதியும் ஏற்படல். இறையருள் கிட்டல். உறுதிமிக்க மனநிலையும் தயாள சிந்தனையும் உருவாகுதல். பாவச் செயல்களிலிருந்து தடுத்தல். ஆக-புறச் சுத்தத்தை ஏற்படுத்தல். *(ஏதேனும் இரண்டு)*

ii. மறைவான விடயங்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதற்கு, மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றி அறிந்துகொள்வதற்கு. மனித சமூகத்தை ஒரே கொள்கையின் கீழ் ஒன்றுபடுத்துவதற்கு. இறை கட்டளையை நபிமார்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி காட்டுவதற்கு, மறுமையில் மனிதன் இறைவன் மீது பலி சுமத்தாமல் இருப்பதற்கு *(எவையேனும் மூன்று)*

iii. பார்க்க - *பாடநூல் : தரம் 10, பக்கம் 12*

**(03)**

i. இபாதத் - அல்லாஹ்வை வணங்கி வழிப்படுதல்.
இமாரத் - பூமியை வளப்படுத்துதல்.
கிலாபத் - பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிருவகித்தல்.

ii. உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்துவது
அல்லாஹ்வுடனான நெருக்கத்தை அதிகரிப்பது
பாவமான காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழப் பயிற்றுவிப்பது
தியாகம்,பொறுமை, பிறர் நலன்பேணல் போன்ற நற்பண்புகளை வளர்ப்பது
இறைதிருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைப்பது
*(ஏவையேனும் மூன்று)*

iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 24,25ஐ பார்க்கவும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. ஒரு மனிதன் இரகசியமாகவும் பரகசியமாகவும் இறைவன் வெறுக்கக்கூடியவற்றிலிருந்து விலகி அவன் விரும்பக்கூடிய விடயங்களின் பால் திரும்பி விடுதல் தௌபா எனப்படும்.

ii. இறைவனுக்கு என்ற தூய எண்ணத்தோடு தவ்பா செய்தல்.
தான் செய்த பாவங்களை விட்டுவிட்டு அவற்றை விட்டும் முற்றுமுழுதாக நீங்குதல்.
தான் செய்த பாவங்களை எண்ணி வருந்தி அதற்காகக் கைசேதப்படல்.
செய்த பாவம் சக மனிதனோடு தொடர்புபட்டிருந்தால் அவனிடம் மன்னிப்பு வேண்டிய நிலையில் இறைவனிடம் நெருங்குதல்.

iii. ஒரு மனிதன் தவ்பா செய்து மீள்வதால் தனது இரட்சகனுக்கு கட்டுப்படல் எனும் உயர்ந்த பண்பைக் கொண்டவனாகிறான். தவ்பா செய்வது அவனது ஈருலக வெற்றிக்குமான வழியாக அமைகின்றது. தவ்பாவின் மூலம் இறைநெருக்கம் கிடைக்கின்றது. நரகத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு சுவனத்தில் நுழைவிக்கப்படுகிறான். அவனது தீமைகள் நன்மைகளாக மாற்றப்படுகின்றன. இவ்வுலகில் சுபீட்சமான வாழ்வு கிடைக்கின்றது.

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. எழுதி வைப்பதன் மூலம் பாதுகாத்தனர், மனனமிடுவதன் மூலம் பாதுகாத்தனர்.

ii. அவர் உலகின் இறுதித் தூதுவராக இருந்தமையும் அவருக்குப் பின்னர் வேறு தூதுவர்கள் வராமையும். (எனவே, அவரது தூது பாதுகாக்கப்பட வேண்டும்)

அவரை ஏற்றுத் தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொண்ட மக்கள் அவரது காலம் முதல் இன்று வரையும் இருந்து வருகின்றமை.

அவரது வரலாறு மிகச் சரியாக எழுதப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளமை. ஒவ்வொரு காலகட்டத்திலும் அவரது சரிதையைக் களங்கப்படுத்தாமல் பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளமை.

அவரது வரலாறு பற்றிய நூல்கள், பொதுவாக எல்லா மொழிகளிலும் முஸ்லிம்களால் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவர்களாலும் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ளமை.

iii. *பாடநூல் தரம் 10 - பக்கம் 8ல் உள்ள 19ம் பாடத்தினை மையமாகக்கொண்டு விடை எழுதுப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல். சமூகத்தில் கட்டுப்பாடு குழையாதிருத்தல். பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழி அமைத்தல். *(எவையேனும் இரண்டு)*

ii. **இஜ்மாஉஸ் ஸரீஹ்** "தெளிவான இஜ்மாஉ" என இதனை அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் வாழும் அனைத்து முஜ்தஹிதுகளும் ஏகோபித்த முடிவில் உள்ளனர் என்பது அவர்களது வார்த்தைகளின் மூலம் தெளிவாகத் தெரிய வந்திருப்பின் அதனையே இவ்வாறு அழைப்பர். இது இஜ்மாஉல் கவ்லி என்றும் அழைக்கப்படுகின்றது.
**இஜ்மாஉல் அக்ஸரிய்யா:** பெரும்பான்மையின் முடிவைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு பிரச்சினையின்போது முஜ்தஹிக்களில் கணிசமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதையே இது குறிக்கும்.
**இம்மாஉஸ் ஸுகூதி:** மௌனம் சார்ந்த இஜ்மாஉ என இதனை அழைக்கலாம், குறிப்பிட்ட காலத்தில் வாழும் முஜ்தஹிதுகளில் ஒருவரோ, சிலரோ குறிப்பிட்ட பிரச்சினைக்கான முடிவு சம்பந்தமாகத் தமது இணக்கத்தையோ, முரண்பாட்டையோ. சாதித்திருப்பின் அம்முடிவை இவ்வாறு அழைப்பர்.

iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 82ல் விளக்கப்பட்டுள்ள கியாஸின் அர்கான்கள் பற்றி சுருக்கமாகக் விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 14ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 61,62ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 57,58,59ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 53,54,55ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)